சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS. 233/2020**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 15ம் நாள் செவ்வாய்க்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லதா | தொழில் | இல்லத்தரசி |
| கணவர் பெயர் | சீனிவாசன் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | காஞ்சிபுரம் | வயது | 47 |

15.07.2025 முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 18.08.2016 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.08.2018 ம் தேதி கிரைய ஒப்பந்த பத்திரத்தில் எழுதப்பட்டுள்ள மேல் எழுத்து (Endorsement) **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி மேல் எழுத்து (Endorsement) சம்மந்தமாக வழக்குரையில் விவரம் கூறவில்லை என்பதால் ஆட்சேபனைக்கப்படுகிறது.) 29.07.2020 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீது **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.